## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பல-கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை செயற்திட்டம் - 2023

---

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் பல-கட்ட நிகழ்ச்சித்திட்ட அணுகுமுறை செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் (ஐபீஆர்டி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 8996 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. உயர் தாக்க வானிலை மற்றும் நீரியல் அபாயங்கள் பற்றிய எச்சரிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக களனி ஆற்றுப்பள்ளத்தாக்கு பல-நோக்கு நீர் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் என்பன செயற்த்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உயர் தாக்க வானிலை, வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை, கீழ் களனி ஆற்றுப்பள்ளத்தாக்கில் வெள்ள அபாயக் குறைப்பு முதலீடு, செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் தற்செயல் அவசரகால பதிலளிப்பு கூறு (சீஈஆர்சீ) ஆகிய நான்கு கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 93 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 27,600 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 92 மில்லியன் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியால் (ஐபீஆர்டி) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 300 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2021 ஒக்தோபர் 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2026 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் அறவிடப்பட்ட ரூபா 72 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் ரூபா 33 மில்லியன் தொகையான கடன் வட்டி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ள செயற்திட்டச் செலவினம் ரூபா 105 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 105 | 2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகளிலும் நாணயமாற்று சமநிலை சீராக்கம் மற்றும் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் சேர்க்கப்பட வேண்டும் என கணக்காய்வு சுட்டிக்காட்டியுள்ளது. அதன் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட்ட இறுதிக் கணக்குகள் திரும்பப் பெறப்பட்டு, நாணயமாற்று சமநிலை சீராக்கம் கணக்கீடு செய்யப்பட்டதுடன் தனிக் குறிப்பாகக் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் வெளிப்படுத்தப்பட்டன. வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டச் செலவினங்களுடன் நேரடியாகச் சம்பந்தப்படாததால், அந்தச் செலவினங்கள் திறைசேரிக் கணக்குகளில் சேர்க்கப்பட்டு, அது தனிக் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டது. | கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் கடன் வட்டி ஆகியவை செயற்திட்டச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணம், பின்னிணைப்பு 5 இன் 3 ஆம் பிரிவு | PMU ஆனது விரிவான செயற்திட்ட பாதீட்டிற்கு ஏற்ப விரிவான அமுல்ப்படுத்தல் திட்டத்தைத் தயாரித்து ஒவ்வொரு செயற்பாட்டிற்குமான நிதித் தேவையையும் தெளிவாகக் குறிப்பிடலாம். அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிற்கான விரிவான | அசல் செயற்திட்ட வடிவமைப்பின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பு கட்டத்தில் அனைத்து செயற்திட்ட கூறுகளுக்கும் விரிவான கிரயத் தாள்கள் தயாரிக்கப்பட்டன. எனினும், ஒவ்வொரு அமலாக்கல் முகவரும் எதிர்பார்க்கும் சேவைக்கான சர்வதேச | விரிவான செயற்திட்ட பாதீட்டிற்கு ஏற்ப விரிவான அமுல்ப்படுத்தல் திட்டம் PMU ஆல் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆலோசகர்களை பணிக்கமர்த்துவதைப் பொறுத்து துணை-செயற்பாடுகளின் இறுதிப்படுத்தல் சார்ந்து இருப்பதால், கூறு 1 இற்கான விரிவான செயற்பாடுகளின் இறுதியாக்கம் பூர்த்தி செய்யப்படவில்லை. | |
| (ஆ) | 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதிய DMA/2009(2) ஆம் இலக்க முகாமைத்துவ க் கணக்காய்வு சுற்றறிக்கை | பொது 287 படிவத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பொது 198 சரக்கிருப்பு பதிவேடு செயற்திட்டத்தின் நிலையான சொத்துக்களின் பதிவுகளை வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. பொது 198 சரக்கிருப்பிற்குப் பதிலாக இருப்பு பதிவேட்டு இல. 287 ஐப் பயன்படுத்துமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. | பொது 287 படிவத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | ஆண்டொன்றிற்கு குறைந்தது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவது அவசியமான போதிலும், அதற்கேற்ப செயற்திட்டம் மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 4 கூட்டங்களையும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். | முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 8996 LK ஆம் இலக்க கடன் உடன்படிக்கை யின் அட்டவணை 2, பிரிவு 1 | செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிந்தாமல் ஒரு தேசிய செயற்திட்ட மேற்பார்வைக் குழுவை அமைக்க வேண்டும். இந்த செயற்திட்டம் 2021 ஒக்தோபர் 12 இல் தொடங்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | NPOC ஐ நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதி அமைச்சின் செயலாளர், நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் 2022 பெப்ரவரி 21 ஆம் திகதிய CResMPA/PD/NPOC/09 ஆம் இலக்க கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. தேவை ஏற்பட்டவுடன் நீர்ப்பாசன அமைச்சினால் உரிய முறையில் NPOC அழைக்கப்படும். | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய செயற்திட்ட மேற்பார்வைக் குழு முறையாகச் செயற்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | | | |
| (அ) | கூறு 01 | உயர் தாக்க வானிலை, வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் பற்றிய முன்னறிவிப்பு மற்றும் முன் எச்சரிக்கை. | 90 | 50 | அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. அடைந்துகொள்ளப் பட்ட நிதி செயலாற்றல் 29.7 சதவீதம் மாத்திரமே ஆகும். | 2024 சனவரி வரை செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தும் முகவரிற்கு தேவையான பதவியணியினர் பதவிநிலைகள் MSD ஆல் அங்கீகரிக்கப்படாததால், IAs இல் உள்ள பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக குறிப்பு விதிமுறைகள் (TOR), விபரக்குறிப்புக்கள், கேள்வி ஆவணங்கள் மற்றும் தேவையான ஆவணங்களை தயாரிப்பதில் கணிசமாக தாமதம் ஏற்பட்டது. | திட்டமிட்டவாறு ஒவ்வொரு கூறுகளின் கீழும் அனைத்து செயற்பாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கூறு 02 | அம்பத்தலே உப்புத்தன்மை தடுப்பு நிர்மாணம் மற்றும் ஆயத்த கற்கைகள் | 63 | 32 | அம்பத்தலே உப்புத் தடுப்பை அமைப்பதில் செயற்திட்டம் தோல்வியடைந்ததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாட்டின் பௌதீக செயலாற்றலை அடைந்தது. | பாதீட்டு மதிப்பீடுகள் உருவாக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் திறைசேரியில் சமர்ப்பிக்கப்பட்ட போது 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வடிவமைப்பு மதிப்பாய்வு மற்றும் மேற்பார்வை ஆலோசனை வழங்கப்படலாம் என கருதப்பட்டது. எனவே, 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வழங்கத் திட்டமிடப்பட்ட நிர்மாணப் பணிகளுக்காக ஒரு ஒப்பந்ததாரருக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை செலுத்துவதற்கும், ஆலோசகர் வழங்கல்களுக்கு செலுத்துவதற்கும் போதுமான பாதீடு ஒதுக்கப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | கூறுகள் 01,02,03 மற்றும் 05 | அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் வானிலை, வெள்ளம் மற்றும் மண்சரிவுகளை முன்னறிவித்தல் மற்றும் முன்கூட்டியே | 81 | 51 | செயற்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூபா 2,025 மில்லியனாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 601.2 | விளக்கமளிக்கப்பட்டவாறு PCT இற்கு பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படாததால், IAs | -மேற்படி- |

எச்சரிக்கை செய்தல், அம்பத்தலே உப்புத்தன்மை தடுப்பை நிர்மாணித்தல் மற்றும் ஆயத்த கற்கைகள், காலநிலை மீள்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசனம் மற்றும் புயல் நீர் உட்கட்டமைப்புக்களை பராமரித்தல்.

மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நிதி முன்னேற்றம் 29.68 சதவீதமாக இருந்தது.

இற்கான பதவியணியினர் பதவிநிலைகளை உருவாக்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்படாதமை, DOM இன் நீர்நிலையியல் வலையமைப்பை நவீனமயமாக்குதல், உவர்நீர்த் தடையை நிர்மாணிப்பதற்கான இறுதி வடிவமைப்பை உருவாக்குவதற்காக வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வை ஆலோசகரை பணிக்கமர்த்துதல், வீ ஓயா நீர்த்தேக்கத்தின் விரிவான வடிவமைப்பை உருவாக்குவதற்காக சர்வதேச ஆலோசகரை பணிக்கமர்த்துதல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனர்த்த தயார்நிலை மற்றும் பதிலளிப்பு முறைமையை உருவாக்குவதற்காக ஆலோசகர் ஒருவரை பணிக்கமர்த்துதல் போன்ற முக்கிய தொழில்நுட்ப பகுதிகளுக்கு சர்வதேச ஆலோசகர்களை பணிக்கமர்த்த அனுமதிக்காதமை, பொருட்களின் பற்றாக்குறை காரணமாக பெரிய நிர்மாணப் பணிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்படாதமை மற்றும் அதிக எரிபொருள் விலை காரணமாக நிர்மாணப் பொருட்களின் எதிர்பாராத விலை அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக 2023 இல் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனால் பணவளிப்பு மற்றும் பௌதீக முன்னேற்றம் எதிர்பார்த்தவாறு அடைந்துகொள்ளப்படவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் நிதிக்கூற்றுக்களில் ரூபா 601.2 மில்லியனாக குறிப்பிடப்பட்ட போதிலும் கூறு 5 இன் கீழ் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவரான நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 97.19 மில்லியன் தொகையான காசு முற்பணம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 601.2 மில்லியன் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டதுடன் அது நிதிச் செயலாற்றல் கூற்றில் வழங்கப்பட்டது. கூறு 5 இன் கீழ் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தப் பொதிகளுக்கான நிதி DC பொதிகளிற்காக CP, RFQ மற்றும் முற்பணக் கொடுப்பனவிற்காக ID இன் தலைமை அலுவலகம் ஊடாக PCT இற்கு செயன்முறைப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட பகுதிக் கொடுப்பனவு விலைப்பட்டியல்களிற்கு சமமான தொகைக்காக மாவட்ட நீர்ப்பாசன அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | உரிய காலப்பகுதியினுள் உரிய செயற்திட்டப் பணிகளை பூர்த்தி செய்வதற்கும், முற்பணங்களை உடனடியாகத் தீர்ப்பனவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 கள விஜயங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய பெரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன முறைமைகளில், விவசாய அமைப்புக்களின் நேரடி ஈடுபாட்டுடனும், கிராமப்புற மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் பங்கேற்புடனும், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு அவசர பழுதுபார்ப்புக்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 18 மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 15 மில்லியன் கிரயத்தில் இச் செயற்திட்டம் முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்தது. | | |
| (i) | எனினும், 11 மாதங்களுக்குப் பின்னர் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஐ.அ.டொலர் 1.113 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் 7.42 சதவீதமாக மாத்திரமே இருந்தது, மேலும் அடுத்த 7 மாதங்களுக்குள் இனங்காணப்பட்ட மிகுதிப் பணிகளின் 92.58 சதவீதம் அடைந்துகொள்ளப்பட வேண்டும். | கூறு-5 2023 மே 28 இல் செயற்படுத்தப்பட்டதுடன் அதுவரை கள விசாரணையை இறுதி செய்வதற்கும் வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும் ID ஆல் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படும் வரை கேள்வி செயன்முறை தொடங்கப்படாததுடன் 2023 யூலை மாதத்தில் வங்கியால் மாதிரி கேள்வி ஆவணங்கள் | செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் தொடர்புடைய வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டது. எனவே, ஒப்பந்தம் வழங்கப்படுவதை பூர்த்திசெய்து 2024 திசெமபர் வரையான காலப்பகுதியின் போது நிர்மாணத்தை பூர்த்திசெய்வதற்கு இந்த காலப்பகுதி அமுல்ப்படுத்தல் முன்னேற்றத்திற்கு போதுமானதாக உள்ளது. | |
| (ii) | ரூபா 87 மில்லியன் பெறுமதியான 69 ஒப்பந்தப் பொதிகள். மீளாய்வாண்டில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சிப்பின் பிரகாரம் குறித்த செயற்திட்டத்திற்கு முறையான மேற்பார்வை இல்லாத காரணத்தினால் பெரும்பாலான நிர்மாணங்கள் ஏனைய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும், ”ஏழை சமூகங்கள் தங்கள் கால்வாய் முறைமையின் சீர்திருத்தத்தை ஆதரிப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவுவது” என்ற முதன்மை நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | PCT உருவாக்கிய முன்மொழிவின் பிரகாரம், சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக சமன் செய்தல், அளவீடு செய்தல், விலைப்பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் ESCOP ஐ அமுல்ப்படுத்துவதற்கு ஆதரவளிப்பதற்கு ID இன் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் FO இற்கு அதிகாரம் அளிக்க திட்டமிடப்பட்டது. எனினும், CP பொதிகளுக்கான அமுல்ப்படுத்தல் FO இன் பொறுப்பாகும். இது தொடர்பில் ஏதேனும் விலகல்கள் காணப்பட்டால், நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் ஊடாக சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி தேவையான திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். | திட்டமிட்டவாறு நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முறைகேடுகள் இடம்பெற்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2023 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்திற்கான வருடாந்த மதிப்பீட்டின் கீழ் ரூபா 2,025 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 601.2 மில்லியன் (29.69%) பயன்படுத்தப்பட்டிருந்தது. திட்டமிட்ட காலப்பகுதிக்குள் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் சரியான கவனம் செலுத்தாத | 2022 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு பாதீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான எதிர்பார்ப்புடன் பாதீட்டு மதிப்பீடுகளின் ஊடாக செயற்திட்டத்திற்காக ரூபா 2,025 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. குறிப்பிட்டுள்ளவாறு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் செயற்திட்ட நடவடிக்கைகளில் மிகவும் மெதுவான முன்னேற்றம் காணப்பட்டது. | திட்டமிட்டவாறு ஒவ்வொரு கூறுகளின் கீழும் அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்வதற்கும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் நிதிகளை முறையாகப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தினால், மீளாய்வாண்டின் போது ஒதுக்கீட்டின் 70.31 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | இச் செயற்திட்டத்தை 5 வருட காலத்திற்குள் அமுல்ப்படுத்துவதற்கு ஐ.அ.டொலர் 92 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐ.அ.டொலர் 2.23 மில்லியன் (2.5%) மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | குறிப்பிட்டுள்ளவாறு, 2023 வரை செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் மிகவும் குறைவாக இருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட சிக்கல்கள் செயற்திட்ட முகாமைத்துவத்தால் நன்கு கவனிக்கப்பட்டு, 2023 திசெம்பரில் நடைபெற்ற உலக வங்கி அமுல்ப்படுத்தல் ஆதரவு பணியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஐ.அ.டொலர் 51 மில்லியன் வரை ஒப்பந்தங்களை வழங்கி ஐ.அ.டொலர் 19 மில்லியன் வரை பணவளிப்பு செய்து பூர்த்தி செய்வதற்கும் 2024 மே மாதத்தில் நடைபெற்ற முன்-MTR பணியை பின்தொடர்வதற்கும் செயற்திட்ட அமுலாக்கம் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. | செயற்திட்ட காலப்பகுதியினுள் பணிகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்திற்கு ரூபா 1,364 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும், அந்தக் காலப்பகுதியில் ரூபா 676 மில்லியன் தொகை மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக ரூபா 785 மில்லியன் தொகை கணக்கில் பயன்படுத்தப்படாமல் 7 மாதங்களாக விளைவற்றிருந்தது. | குறிப்பிட்டுள்ளவாறு, CBSL இல் நியமிக்கப்பட்ட கணக்கின் ஆண்டு இறுதி மீதி ரூபா 784 மில்லியன் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அடுத்த 6 மாதங்களுக்கு முன்னறிவிக்கப்பட்ட செயற்திட்டச் செலவினங்களை ஈடுசெய்வதற்கு முன்பணத் தொகையைக் கோரலாம், இது உலக வங்கியால் நியமிக்கப்பட்ட கணக்கு மூலம் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக வழங்கப்படும் வசதி ஆகும். அதன் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டு முடிவிலும், அடுத்த சில மாதங்களுக்குத் தேவையான பணத் தொகை DA இல் உள்ள மீதியாக இருக்கின்றது. | செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும் நிதியானது சிக்கனமாக செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கடன் உடன்படிக்கையின் பின்னிணைப்பு 2, பிரிவு 1 இன் பிரகாரம் செயற்திட்டம் மேம்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும், நடைமுறைக்கு வந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல், வங்கியால் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயற்பாட்டு நிதி முகாமைத்துவ மென்பொருள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், CRIP செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7.4 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு மென்பொருளை உரிய கட்டணங்களுடன் பயன்படுத்துவதற்கான திறனை சரிபார்ப்பதற்கு செயற்திட்டம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | CRIP செயற்திட்டத்திற்காக ரூபா 7.4 மில்லியன் கிரயத்தில் ஒரு கணக்கீட்டு முறைமை உட்பட முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) உருவாக்கப்பட்டுள்ளது, அனைத்து வங்கி நிதியுதவி செயற்திட்டத்திற்காக நடைமுறையில் உள்ள செயற்திட்ட முகாமைத்துவ நோக்கத்திற்காக உலக வங்கியுடன் இணங்கப்பட்ட முக்கிய தேவைப்பாடுகளில் ஒன்றாக உள்ளது. | கணக்கீட்டு மென்பொருள் பயன்படுத்தப்பட வேண்டும். |